Q1C-025

**DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)**

| **Name of the Test:** | Forest Department Test- Forest Law and Forest Revenue (With Books) | 073 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. Who is head of State Board for Wildlife in State?
மாநிலத்தில் வனவிலங்குகளுக்கான மாநில வாரியத்தின் தலைவர் யார்?

(A) Chief Minister of State
மாநில முதலமைச்சர்

(B) Minister of Forests in Respective state
மாநில வனத்துறை அமைச்சர்

(C) Prime Minister, Government of India
பிரதமர், இந்திய அரசு

(D) Principal Chief Conservator of Forests, Tamil Nadu
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், தமிழ்நாடு

2. How many numbers of schedules are mentioned in the wildlife protection Act?
வனஉயிரினப் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை வகைப்பாட்டின் எண்ணிக்கை

(A) 5

(B) 6

(C) 7

(D) 4

3. Section 47 of Indian Penal code defines
இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 47 —————— யை வரையறுக்கிறது.

(A) Animal
விலங்கு

(B) Public Servant
அரசு ஊழியர்

(C) Death
இறப்பு

(D) Imprisonment
சிறை தண்டனை

4. Power to compound offences under section 54 of Wildlife Protection Act is to be done by the officer not below the rank of?
வனஉயிரினப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 54ன் கீழ் குற்றங்களில் இணக்க கட்டணம் வசூலிக்கும் அதிகாரம் எந்த அலுவலர் நிலைக்கு குறையாதவர்?

(A) Conservator of Forests
வனப்பாதுகாவலர்

(B) Forest Range Officer
வனச்சரக அலுவலர்

(C) Deputy Conservator of Forests
துணை வனப்பாதுகாவலர்

(D) Forest Guard
வனக்காப்பாளர்

5. Wildlife Protection Act 1972 defines Constitution of National Tiger Conservation Authority Under section.
வனஉயிரினப் பாதுகாப்பு சட்டம் 1972ல் ———————— பிரிவின் கீழ் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தை அமைத்தல் தொடர்பாக வரையறுக்கிறது.

(A) 38 L
(B) 39
(C) 35
(D) 17

6. Which section of Wildlife (Protection) Act, 1972, empowers the State Government to appoint Honorary Wildlife Wardens?
வனஉயிரினப் (பாதுகாப்பு) சட்டம் 1972ல் ———————— பிரிவின் கீழ் மாநில அரசுக்கு கௌரவ வனஉயிரினக் காப்பாளரை நியமிக்க அதிகாரம் அளிக்கிறது.

(A) Section 4
பிரிவு 4
(B) Section 18
பிரிவு 18
(C) Section 21
பிரிவு 21
(D) Section 3
பிரிவு 3

7. 'Panthera tigris' is specified under schedule ________ of Wildlife Protection Act 1972
வனஉயிரினப் பாதுகாப்பு சட்டம் 1972ல் ———————— பட்டியலின் கீழ் புலி (Panthera tigris) வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(A) Part I of Schedule I
அட்டவணை I – பகுதி I
(B) Part I of Schedule II
அட்டவணை I – பகுதி II
(C) Part II of Schedule I
அட்டவணை II – பகுதி I
(D) Schedule III
பகுதி III

8. Schedule that contains animals are considered as vermin in Wildlife Protection Act 1972
வனஉயிரின பாதுகாப்புச் சட்டம் 1972 இல் வெர்மின் எந்த அட்டவணையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(A) Schedule VI
அட்டவணை VI
(B) Schedule V
அட்டவணை V
(C) Schedule IV
அட்டவணை IV
(D) Schedule III
அட்டவணை III

9. No person shall enter a sanctuary with any weapon except with the previous permission in writing of the________ under section 31 of wildlife Protection Act 1972.
வனஉயிரின பாதுகாப்புச் சட்டம் 1972ன் பிரிவு 31 கீழ், ———————— அலுவலரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி யாரும் வனஉயிரின சரணாலயத்திற்குள் ஆயுதங்களுடன் நுழையக்கூடாது.

(A) Forest Range Officer
வனச்சரக அலுவலர்

(B) Assistant Conservator Forests
உதவி வனப்பாதுகாவலர்

(C) Forester
வனவர்

(D) Chief Wildlife Warden
தலைமை வனஉயிரினக்காப்பாளர்

10. Which Section under Tamil Nadu Forest Act 1882 to delicate the powers of Government to redefine the limits of Reserve Forest in certain cases
தமிழ்நாடு வனச்சட்டம் 1882ல் சில வழக்குகளில் காப்புக் காடுகளின் வரம்பை மறுவரையறை செய்ய அரசுக்கு எந்த பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(A) Section 12A
பிரிவு 12A

(B) Section 16A
பிரிவு 16A

(C) Section 17A
பிரிவு 17A

(D) Section 24 A
பிரிவு 24 A

11. The following species is not extempted from the purview of Tamil Nadu Timber Transit Rules
தமிழ்நாடு தடிமர இடப்பெயர்வு விதிகளில் விலக்களிக்கப்படாத மர வகை எது?

(A) Prosopis Juliflora (Seemaikaruvel)
ப்ரோசோபிஸ் ஜூலிஃப்ளோரா(சீமைகருவேல்)

(B) Casuarina equisetifolia (Savukku)
காசுவரினா ஈக்விசெட்டிஃபோலியா (சவுக்கு)

(C) Borassus flabellifer (Panai)
போராசஸ் ஃபிளாபெல்லிஃபர் (பனை)

(D) Artocarpus hirsutus (Aini pala)
ஆர்டோகார்பஸ் ஹிர்சுடஸ் (அயனி பலா)

12. Power to arrest the offender under Tamil Nadu Forest Act, 1882 is given to the following rank of Forest Officer and above?
தமிழ்நாடு வனச் சட்டம், 1882ன் கீழ் குற்றவாளியைக் கைது செய்யும் அதிகாரம் பின்வரும் வன அதிகாரி மற்றும் அதற்கு மேல் பதவியில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

(A) Forest Watcher
வனக்காவலர்

(B) Anti - Poaching Watcher
வேட்டைத்தடுப்புக் காவலர்

(C) Forest Guard
வனக்காப்பாளர்

(D) Forester
வனவர்

13. Select the correct order of the Notification of Reserve Forest under Tamil Nadu Forest Act 1882?
காப்புக்காடாக அறிவிக்கை செய்வதற்கு தமிழ்நாடு வனச்சட்டம் 1882ன் கீழ் சரியான நடைமுறையை காண்க.

1. Forest shall be deemed to be reserved forest
காப்புக்காடாக அறிவித்தல்

2. Government publishing notification in the Official Gazette of state
மாநில அரசிதழில் அறிவிக்கை செய்தல்

3. Publish in the Official Gazette of the district
மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல்

4. Appointing Forest Settlement Officer
வனஉரிமை தீர்ப்பு அலுவலரை நியமித்தல்

(A) 3 4 2 1

(B) 1 2 3 4

(C) 3 1 2 4

(D) 1 3 2 4

14. In which Section of Tamil Nadu Forest Act 1882, rights to allow for sale of sandalwood tree raised in patta/private lands.
தனியார் நிலங்களில் வளர்க்கப்பட்ட சந்தன மரங்களை விற்பனை செய்வதற்கான தமிழ்நாடு வனச்சட்டம் 1882ன் கீழ் பிரிவு —————— அனுமதிக்கப்பட்டுள்ளது.

(A) 35B

(B) 36F

(C) 34

(D) 37

15. In which year the amendments were made empowering forest officials under Tamil Nadu Forest Act, 1882 to confiscate seizures inolved in Scheduled Timber Cases?
தடி மர வழக்குகளில் எந்தாண்டு முதல் வன அலுவலர்களுக்கு பிடி பொருட்களை கையகப்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) 1972
(B) 1992
(C) 1979
(D) 2002

16. In Section 36A of Tamil Nadu Forest Act 1882, permission for sandal wood possession limit of above_________ kilograms to be obtained from the District Forest Officer.
தமிழ்நாடு வனச்சட்டம் 1882, பிரிவு 36A வின் கீழ் ________________ எத்தனை கிலோவிற்கு மேல் சந்தன மரத்துண்டுகளை வைத்திருப்பதற்கு மாவட்ட வன அலுவலரின் முன் அனுமதி பெற வேண்டும்.

(A) 5
(B) 10
(C) 100
(D) 200

17. Setting fire to Reserve Forest is offence under section ______ Tamil Nadu Forest Act 1882.
காப்புக்காட்டிற்கு நெருப்பு வைத்தால் தமிழ்நாடு வனச்சட்டம் 1882ல் எந்த பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

(A) Section 25
பிரிவு 25
(B) Section 24
பிரிவு 24
(C) Section 23
பிரிவு 23
(D) Section 21
பிரிவு 21

18. In which section Tamil Nadu Forest Act 1882 provides power to arrest without warrant
பிடியாணை இல்லாமல் கைது செய்யும் அதிகாரம் தமிழ்நாடு வனச்சட்டம் 1882ன் படி எந்த பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளது?

(A) Section 54
பிரிவு 54
(B) Section 56
பிரிவு 56
(C) Section 51
பிரிவு 51
(D) Section 52
பிரிவு 52

19. Cattle Trespass Act came to force in the year
கால்நடைகள் அத்துமீறல் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

(A) 1871
(B) 1870
(C) 1885
(D) 1972

20. Number of Tiger Reserves in Tamil Nadu as on date
தமிழ்நாட்டில் தற்பொழுது எத்தனை புலிகள் காப்பகங்கள் உள்ளன?

(A) 4
(B) 3
(C) 5
(D) 6

21. Who is the chariman of the State Green Committee?
மாநில பசுமைக்குழுவின் தலைவர் யார்?

(A) Principal Secretary, Environment, Climate Change and Forest Department
சுற்றுச்சூழல், கால நிலை மாற்ற மற்றும் வனத்துறையின் முதன்மை செயலாளர்
(B) Principal Chief Conservator of Forests, Tamil nadu
தமிழ்நாட்டின் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(C) Chief Wildlife Warden
தலைமை வனஉயிரினக் காப்பாளர்
(D) State Forest Minister
மாநில வனத்துறை அமைச்சர்

22. Which of the following species is not a Scheduled Timber?
கீழ்கண்டவற்றுள் எது பட்டியல் தடி மரமில்லை ?

(A) Rose wood
ஈட்டி மரம்
(B) Teak wood
தேக்கு மரம்
(C) Black wood
கருங்காலி மரம்
(D) Mahagony
மகாகனி

23. The prevention of Corruption Act have been enacted in the year
லஞ்ச ஒழிப்பு தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(A) 1950
(B) 1960
(C) 1988
(D) 1998

24. Under prevention of Corruption Act *"Any pbulic servant who obtains or accepts to obtain from any person, an undue advantage, with the intention to perform or cause performance of public duty improperly or dishonestly or to forbear or cause forbearance to perform such duty either by himself or by another public servant"* is punishable upto ________ years.
ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ், *"தானாகவோ அல்லது வேறொரு பொது ஊழியர் மூலமாகவோ கடமையை முறையற்ற அல்லது நேர்மையற்ற முறையில் நிறைவேற்றும் நோக்கத்துடன் அல்லது அதைச் செய்யத் தடை அல்லது சகிப்புத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்துடன், எந்தவொரு நபரிடமிருந்தும் தேவையற்ற நன்மையைப் பெறுவது அல்லது ஏற்றுக்கொள்வது அல்லது பெற முயற்சிப்பது."* ________ ஆண்டுகள் வரை தண்டனைக்குரிய குற்றமாகும்.

(A) 7
(B) 1
(C) 5
(D) 10

25. Head office of the National Biodiversity Authority India at
இந்திய தேசிய பல்லுயிர் ஆணையத்தின் தலைமையிடம் எங்குள்ளது?

(A) Kolkata
கொல்கத்தா
(B) New Delhi
புதுடில்லி
(C) Chennai
சென்னை
(D) Mumbai
மும்பை

26. As per which Section of Biological Diversity Act, 2002 the offences are cognizable and non-bailable
பல்லுயிர் பன்முகத்தன்மை சட்டம், 2002 இன் எந்தப் பிரிவின்படி குற்றங்கள் விசாரணை மேற்கொள்ள முடியாத மற்றும் ஜாமீனில் வெளிவர முடியாதவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) Section 59
பிரிவு 59
(B) Section 58
பிரிவு 58
(C) Section 56
பிரிவு 56
(D) Section 57
பிரிவு 57

27. Who shall be the Secretary of the District Committee Tamil Nadu Preservation of Private, Forests Act
தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் செயல்படும் மாவட்ட குழுவின் செயலாளர் யார்?

(A) District Collector
மாவட்ட ஆட்சித்தலைவர்

(B) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

(C) Personal Assistant to Collector
மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்

(D) Executive Engineer of the Agriculture Department
செயற்பொறியாளர், வேளாண்மைத்துறை

28. Which Section of the Schedule Tribes and Other Traditional Forest Dwellers Act, 2006, Accords *Forest Rights*
பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரிய மலைவாழ் மக்கள் சட்டம் 2006ல் எந்தப்பிரிவு வன நிலங்களின் மீதான உரிமை வழங்குகிறது?

(A) 4

(B) 6

(C) 3

(D) 2

29. Who initiates the process of determination of Forest Right under Schedule Tribes and Other Traditional Forest Dwellers Act, 2006
பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரிய மலைவாழ் மக்கள் சட்டம் 2006ன் படி வன உரிமையை நிர்ணயிக்கும் செயல்முறையை யார் தொடங்குகிறார்?

(A) Grama Sabha
கிராம சபா

(B) District Committee
மாவட்ட குழு

(C) Sub Divisional Committee
உட்கோட்ட குழு

(D) Forest Rights Committee
வன உரிமை குழு

30. Traditional *"Forest dweller"* means any member or community who has for at least three generations prior to the ________ primarily resided in and who depend on the forest or forests land for bona fide livelihood needs is defined as per Scheduled Tribes and other Traditional Forest Dwellers Act, 2006

பாரம்பரிய "மலைவாழ் மக்கள்" என்பது, ________ க்கு முன் குறைந்தது மூன்று தலைமுறைகளாகக் கொண்ட எந்த ஒரு உறுப்பினர் அல்லது சமூகம் முதன்மையாக வசிக்கும் மற்றும் நேர்மையான வாழ்வாதாரத் தேவைகளுக்காக காடு அல்லது காடுகளின் நிலத்தை சார்ந்திருப்பவர் என்பது பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற மலைவாழ் மக்கள் சட்டம், 2006 படி வரையறுக்கப்படுகிறது.

(A) 13th day of December, 2005
13 டிசம்பர் 2005

(B) 13th day of November, 2005
13 நவம்பர் 2005

(C) 13th day of January, 2006
13 ஜனவரி 2006

(D) 13th day of February, 2006
13 பிப்ரவரி 2006

31. Public servant unlawfully engaging in trade is defined in the section of the Indian Penal Code (45 of 1860)

இந்திய தண்டனை சட்டம் 1860 (45)ன் எந்த பிரிவின் கீழ் ஒரு அரசு பணியாளர் சட்டவிரோதமாக பணிபரிவர்த்தனையில் ஈடுபடுவது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

(A) Section 168
பிரிவு 168

(B) Section 420
பிரிவு 420

(C) Section 170
பிரிவு 170

(D) Section 215
பிரிவு 215

32. The Forest (Conservation) Act 1980 was implemented for the cause of

வனப்பாதுகாப்பு சட்டம் 1980 நடைமுறைப்படுத்தப்பட்டதற்கான நோக்கம்

(A) To Prohibit Deforestation
காடழிப்பை தடுப்பது

(B) To conserve Tiger strength
புலிகள் எண்ணிக்கை பாதுகாத்தல்

(C) To Encourage Planting
நடவு பணிகள் ஊக்குவித்தல்

(D) To Control Poaching
வேட்டையாடுவதை கட்டுப்படுத்துதல்

33. Which is maximum punishment prescribed under Forest Conservation Act, 1980?

வனப்பாதுகாப்புச் சட்டம் 1980 ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச தண்டனை எவ்வளவு?

(A) 1 month
1 மாதம்

(B) 6 months
6 மாதங்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 3 months
3 மாதங்கள்

34. contravention of the provisions of section 3 or section 4 or section 6 shall be punishable with imprisonment for a term________, is defined under section 55 of Biological Diversity Act
பல்லுயிர் பெருக்க சட்டம் பிரிவு 55ன் படி அச்சட்டத்தின் பிரிவு 3, 4 மற்றும் 6 ஆகியவற்றை மீறும் இனங்களுக்கு எத்தனை ஆண்டுகள் வரை தண்டனையை நீட்டிக்க முடியும்?

(A) extend to two years, or with fine which may extend to ten lakh rupees and where the damage caused exceeds four lakh rupees such fine
நான்கு இலட்சம் ரூபாய் வரை சேதம் ஏற்படுத்திய இனங்களுக்கு/இரண்டு ஆண்டுகள் அல்லது பத்து இலட்சம் ரூபாய் வரை அபராதம்

(B) extend to three years, or with fine which may extend to ten lakh rupees and where the damage caused exceeds six lakh rupees such fine
ஆறு இலட்சம் ரூபாய் வரை சேதம் ஏற்படுத்திய இனங்களுக்கு/மூன்று ஆண்டுகள் அல்லது பத்து இலட்சம் ரூபாய் வரை அபராதம்

(C) extend to four years, or with fine which may extend to ten lakh rupees and where the damage caused exceeds eight lakh rupees such fine
எட்டு இலட்சம் ரூபாய் வரை சேதம் ஏற்படுத்திய இனங்களுக்கு/நான்கு ஆண்டுகள் அல்லது பத்து இலட்சம் ரூபாய் வரை அபராதம்

(D) extend to five years, or with fine which may extend to ten lakh rupees and where the damage caused exceeds ten lakh rupees such fine
பத்து இலட்சம் ரூபாய் வரை சேதம் ஏற்படுத்திய இனங்களுக்கு/ஐந்தாண்டுகள் அல்லது பத்து இலட்சம் ரூபாய் வரை அபராதம்

35. In which section of Criminal Procedure Code deals about power to seize offensive weapons
குற்றவியல் நடைமுறை சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் ஆபத்தை உண்டாக்கும் கருவிகளை கையகப்படுத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) section 51
பிரிவு 51

(B) section 53
பிரிவு 53

(C) section 50
பிரிவு 50

(D) section 52
பிரிவு 52

36. What is the Time elapsed between the meetings of committee made under the Tamilnadu Hill areas preservation of trees Act was not
தமிழ்நாடு மலைதள பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அமைக்க பெற்ற குழுவால் நடத்தப்படும் இருக்கூட்டங்களுக்கு இடையுள்ள கால அவகாசம் ________ நாட்கள் மிகாமல் இருக்க வேண்டும்.

(A) More than 2 months
2 மாதங்களுக்கு மேல்

(B) Less than a month
1 மாதத்திற்குள்

(C) More than 3 months
3 மாதங்களுக்கு மேல்

(D) Less than 15 days
15 தினங்களுக்குள்

37. No court shall take cognizance of offence under Tamil Nadu Hill Areas Act except in writing by the following authority?
தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்களை பாதுகாத்தல்) சட்டத்தின் கீழ் எந்த நீதிமன்றமும் பின்வரும் அதிகாரத்தால் எழுத்துப்பூர்வமாக இல்லாமல் குற்றத்தை எடுத்துக் கொள்ளாது?

(A) Forest Range Officer
வனச்சரக அலுவலர்

(B) Tahsildar
தாசில்தார்

(C) Agriculture Engineering Department
வேளாண்துறை பொறியாளர்

(D) District Committee
மாவட்ட குழு

38. In which section of Criminal Procedure code deals with powers to police to seize property suspected to be stolen
குற்றவியல் நடைமுறை சட்டம் எந்த பிரிவின் கீழ் திருடியதாக சந்தேகப்படும் போது காவல்துறை அதிகாரி உடமைகளை கைப்பற்றப்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ளது?

(A) Section 556
பிரிவு 556

(B) Section 243
பிரிவு 243

(C) Section 550
பிரிவு 550

(D) Section 102
பிரிவு 102

39. Evidence may be given of facts in issue and relevant facts is defined under section ________ of Indian Evidence Act
இந்திய சாட்சியச் சட்டத்தின் படி பிரச்சனை தொடர்பான உண்மைகளுக்கு நீதிமன்றத்தில் சாட்சி வழங்கப்படலாம் ________ பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளன.

(A) Section 5
பிரிவு 5

(B) Section 10
பிரிவு 10

(C) Section 7
பிரிவு 7

(D) Section 8
பிரிவு 8

40. In which Section of Indian Evidence Act in which shall presume defined
இந்திய சாட்சிய சட்டத்தின் படி எந்த பிரிவு யூகத்தின் அடிப்படை பற்றி விளக்குகிறது?

(A) Section 4
பிரிவு 4

(B) Section 5
பிரிவு 5

(C) Section 3
பிரிவு 3

(D) Section 6
பிரிவு 6

41. In which section of Indian Evidence Act, oral evidence is discussed?
இந்திய சாட்சிய சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் வாய்மொழி சாட்சியம் விவரிக்கப்பட்டுள்ளது?

(A) Section 62
பிரிவு 62

(B) Section 63
பிரிவு 63

(C) Section 60
பிரிவு 60

(D) Section 65
பிரிவு 65

42. In which year Tamil Nadu Hill Areas (Preservation of Trees) Act has been enacted?
தமிழ்நாடு மலைதளப் பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் எந்த வருடம் இயற்றப்பட்டது?

(A) 1972

(B) 1980

(C) 1965

(D) 1955

43. How many members are present in District Hill Area Preservation Committee constituted under Tamil Nadu Hill Areas (Preservation of Trees) Act?
தமிழ்நாடு மலைப் பகுதிகள் (மரங்களைப் பாதுகாத்தல்) சட்டத்தின், கீழ் அமைக்கப்பட்ட மாவட்ட மலைப் பகுதிகள் பாதுகாப்பு குழுவில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்?

(A) 3

(B) 4

(C) 5

(D) 6

44. In which Section Prohibition of Cutting trees is discussed under Tamilnadu Hill (Preservation of trees) Act
தமிழ்நாடு மலை (மரங்களை பாதுகாத்தல்) சட்டத்தின் கீழ் எந்தப் பிரிவு மரங்களை வெட்டுவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

(A) Section 2A
பிரிவு 2A

(B) Section 2C
பிரிவு 2C

(C) Section 3
பிரிவு 3

(D) Section 4
பிரிவு 4

45. The following _______ section empowers forest officer to confiscate under Tamil Nadu Forest Act.
தமிழ்நாடு வனச் சட்டத்தின் ——————— பிரிவின் கீழ் பறிமுதல் செய்ய வன அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கிறது.

(A) 49(A)
(B) 51
(C) 53
(D) 41

46. Power to stop ways and water courses in Reserved Forest under section _______ of Tamil Nadu Forest Act, 1882
காப்புக்காட்டில் பாதைகளையும் நீரோட்டங்களையும் அடைப்பதற்கான அதிகாரம் தமிழ்நாடு வனச்சட்டம் 1882 பிரிவு ———————ல் கூறப்படுகிறது.

(A) 19
(B) 20
(C) 21
(D) 35

47. The Following species are Royalties under section 40-G of Tamil nadu Forest Act, 1882
தமிழ்நாடு வனச்சட்டம் 1882, பிரிவு 40-G ன் படி கீழ்கண்டுள்ள இனங்கள் அரசுரிமைகளாகும்.

(A) Teak, Sandal, Rosewood and Sandal
தேக்கு, சந்தனம், தோதகத்தி மற்றும் செம்மரம்

(B) Teak, Silver Oak, Red Sandal, Rosewood and Tiger nail and skin
தேக்கு, சில்வர் ஓக், செம்மரம், தோதகத்தி மற்றும் புலியின் நகம், தோல்

(C) Teak, Blackwood, Sandal, Ebony and also Ivory and Teeth of Elephants
தேக்கு, கருங்காலி, சந்தனமரம், எபனி மற்றும் யானையின் தந்தம் பற்கள்

(D) Teak, Bamboo, Rosewood and Sandal
தேக்கு, மூங்கில், தோதகத்தி மற்றும் சந்தனம்

48. The District Committee meeting shall be conducted within a period of______ Months from one meeting to next meeting is mentioned under section 2 B of the Tamil Nadu Preservation of Private Forest Act, 1949.
தமிழ்நாடு தனியார் வனங்கள் பாதுகாப்பு (பேணுகை) சட்டம் 1949 பிரிவு, 2 B ன்படி மாவட்ட குழுவின் ஒரு கூட்டத்திற்கும் அதனையடுத்த கூட்டத்திற்குமான இடைவெளி ———— மாதங்களுக்கு மிகாதிருக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

(A) Three
மூன்று

(B) Five
ஐந்து

(C) Two
இரண்டு

(D) Four
நான்கு

49. The tamil Nadu Preservation of Private Forest Act, 1949 under section 8 defined as
தமிழ்நாடு தனியார் வனங்கள் பாதுகாப்பு (பேணுகை) சட்டம் 1949 பிரிவு 8 ன் படி ———— என கூறப்பட்டுள்ளது.

(A) Prohibit or regulate the doing any act likely to be detrimental to the preservation of such forests
வனங்களின் பேணுகைக்கு ஊறுவிளைவிக்கும் எந்தவொரு செயலையும் தடுக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(B) Regulate the exercise of customary or prescriptive rights in such forests
வனங்களின் வழக்காறு அல்லது நீடனுபோக உரிமையை பயன்படுத்தலாம்.

(C) Do not cut trees or reeds type plants
மரங்களையோ அல்லது நாணல் வகை செடிகளை வெட்டவோ கூடாது.

(D) No prosecution shall be instituted against any person without sanction of the district committee.
மாவட்ட குழுவின் இசைவின்றி எந்த ஒரு நபர் மீதும் எந்த ஒரு குற்ற வழக்கும் தொடர்ந்திட இயலாது.

50. Prohibition of Hunting is defined under section ______ of the Wildlife (Protection) Act, 1972
வனஉயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு ————ன்படி வேட்டையாடுவதற்கு தடை பற்றி விளக்கப்பட்டுள்ளது.

(A) 9

(B) 11

(C) 20

(D) 8

51. The Hunting may be permitted by the Chief Wildlife Warden for the following special purpose, under section 12 of The Wildlife (Protection) Act, 1972
வனஉயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 12ன் படி கீழ்கண்ட சிறப்பு நோக்கங்களுக்காக வேட்டையாட தலைமை வனஉயிரினக் காப்பாளர் அனுமதி வழங்கலாம் என கூறப்பட்டுள்ளது.

(A) Food, Trophy, and making medicine
உணவு, ட்ரோஃபி தயாரித்தல் மற்றும் மருந்து தயாரிக்க

(B) Ornament, Wool and making belt
ஆபரணம், கம்பளி மற்றும் கச்சை தயாரிக்க

(C) Education, scientific research and scientific management
கல்வி, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மேலாண்மை

(D) Sales, exports and making revenue
விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் வருவாய் உண்டாக்க

52. No new licences for Arms shall be granted within a radius of_______ kilometer of a sanctuary without the prior concurrence of the Chief Wildlife Warden, is defined under section 34(3) of The Wildlife (Protection) Act, 1972
வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு 34 (3)ன் படி தலைமை வனஉயிரினக்காப்பாளரின் முன் ஒருங்கிசைவின்றி வனஉயிரின சரணாலய பகுதியிலிருந்து ——————கி.மீ ஆரத்திற்குள் குடியிருக்கும் எவருக்கும் புதிய ஆயுத உரிமைகள் வழங்கப்படக்கூடாது என கூறப்பட்டுள்ளது.

(A) 15

(B) 10

(C) 8

(D) 1

53. The forest land to be diverted for the purpose mentioned in this sub section (construction of school, hospital and Anganwadis) is less than _________ in each case, is defined of The Scheduled tribes and other traditional Forest Dwellers (Recognition of Forest Rights) Act. 2006, under section 3 (2) (i)
பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி மலைவாழ்மக்கள் (வன உரிமைகள் அங்கீகரிப்பு) சட்டம் 2006 பிரிவு 3 (2) (i)ன் படி இந்த உட்பிரிவில் கண்டுள்ளவாறு (பள்ளிகூடம் கட்டுதல், அங்கன்வாடிகள், நியாயவிலை கடைகள் கட்டுதல்) போன்ற செயல்களுக்காக மட்டும் வன நிலமானது ஒவ்வொரு நிகழ்விலும் —————— க்கு குறைவாகவே இருக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

(A) 2.0-Hectare
2.0 ஹெக்டேர்

(B) 1.0-Hectare
1.0 ஹெக்டேர்

(C) 2.5-Hectare
2.5 ஹெக்டேர்

(D) 1.5-Hectare
1.5 ஹெக்டேர்

54. An offence committed by any authority or committee or officer or member of such authority or committee contravenes any provision of this act, shall be punished with fine which may extend to ________ Rupees, is defined under section 7 of The Scheduled Tribes and other traditional forest Dwellers (Recognition of Forest Rights) Act, 2006
பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி மலைவாழ்மக்கள் (வன உரிமைகள் அங்கீகரிப்பு) சட்டம் 2006 பிரிவு 7ன் படி, இந்த சட்டத்தின் கீழான குழுக்கள் மற்றும் அதிகாரக் குழுக்களின் அதிகாரிகள் அல்லது உறுப்பினர்களால் செய்யப்படும் குற்றங்களுக்கு ________ ரூபாய் வரையிலான அபராதம் விதித்து தண்டிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

(A) Two Thousand
இரண்டாயிரம்

(B) Three Thousand
மூவாயிரம்

(C) One Thousand
ஆயிரம்

(D) Four Thousand
நான்காயிரம்

55. The Jamabandi should ordinarily be conducted at ________ is defined under Number 12 (3) of the Board of Revenue Standing orders
வருவாய் வாரிய நிலையாணை எண். 12(3) ன் படி பொதுவாக ஜமாபந்தி ________ ல் நடத்தப்படும் என கூறப்பட்டுள்ளது.

(A) Revenue divisional office
வருவாய் கோட்ட அலுவலகம்

(B) District Headquarters
மாவட்ட தலைமையிடம்

(C) Taluk Headquarters
தாலுக்கா தலைமையிடம்

(D) Village Administration Office
கிராம நிர்வாக அலுவலகம்

56. No land belonging to government shall be assigned or sold to any person other than a _______ is defined under Number 15(26)(1) of the Board of Revenue Standing Orders
வருவாய் வாரிய நிலையாணை எண். 15 (26) (1) ன் படி ________ அல்லாத எவருக்கும் அரசு நிலம் வழங்குவது அல்லது விற்பனை செய்யக்கூடாது என கூறப்பட்டுள்ளது.

(A) Citizens of India
இந்திய குடிமகன்

(B) Citizen of Tamil Nadu
தமிழ் குடிமகன்

(C) Scheduled Tribe
பழங்குடியினர்

(D) Creamy layer
கிரீமிலேயர்

57. Water cess on dry land is defined in the Board of Revenue standing orders Number
வறண்ட நில தண்ணீர் வரி குறித்து வருவாய் வாரிய நிலை ஆணை எண் ———————— ல் வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) 1

(B) 4

(C) 3

(D) 2

58. The animal article is ______ defined under section 2(2) of The Wildlife (Protection) Act, 1972
வனஉயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு 2 (2)ன் படி விலங்கு பொருட்கள் என்பது ———————— குறிக்கும்.

(A) An article made from wild animal other than vermin
வெர்மின் அல்லாத வனவிலங்குகளிலிருந்து பெறப்பட்ட பொருட்கள்

(B) Skin bone, for made from vermin
வெர்மின் விலங்குகளின் தோல், எலும்பு

(C) All animal body parts made from other than vermin
வெர்மின் அல்லாத அனைத்து விலங்குகளின் உடல் பாகங்கள்

(D) An article made from vermin and other than vermin
வெர்மின் மற்றும் வெர்மின் அல்லாத அனைத்து விலங்குகளிலிருந்து பெறப்பட்ட பொருட்கள்

59. The dealings in trophy and animal articles without license prohibited, is defined under section _______ of The Wildlife (Protection) Act, 1972
ட்ரோப்பி மற்றும் விலங்குப் பொருட்கள் சம்மபந்தப்பட்ட உரிமம் இல்லாத வணிகத் தொடர்புகள் தடை செய்யப்படுவது பற்றி வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு ———————— ல் கூறப்பட்டுள்ளது.

(A) 43

(B) 42

(C) 40

(D) 44

60. Who constitute "State Compensatory Afforestation Fund Management and Planning Authority"?
மாநில ஈடுசெய்யும் காடுவளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடும் அமைப்பு யாரால் அமைக்கப்படுகிறது?

(A) State Government
மாநில அரசு

(B) Central Ministry of Forests
மத்திய வனத்துறை அமைச்சகம்

(C) Central Government
மத்திய அரசு

(D) Chief Secretary
தலைமை செயலாளர்

61. In which Section of Indian Penal Code deals with criminal trespass.
எந்த பிரிவின் கீழ் இந்திய தண்டனை சட்டம் அத்துமீறல் குறித்து கையாளப்படுகிறது.

(A) Section 403
பிரிவு 403

(B) Section 441
பிரிவு 441

(C) Section 412
பிரிவு 412

(D) Section 425
பிரிவு 425

62. Who is the appellate authority under Tamil Nadu Sandal Wood Trees on Patta Land Rules 2008 in fixing the price of the sandalwood?
தமிழ்நாடு பட்டா நில சந்தனமரம் விதிகள் 2008ன் படி சந்தன மர மதிப்பீட்டிற்கான மேல் முறையீட்டு அலுவலர் யார்?

(A) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

(B) Regional Chief Conservator of Forests
பிராந்திய தலைமை வனப்பாதுகாவலர்

(C) Conservator of Forests
வனப்பாதுகாவலர்

(D) Secretary, Forest Department
வனத்துறை செயலாளர்

63. Who will issue 'Certificate of Ownership' to possess trophy of any animal included in Schedule-I of Wildlife Protection Act?
வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் அட்டவணை I- ல் உள்ள விலங்குகளின் இறந்த பொருட்கள் வைத்துகொள்ள உரிமை சான்று அனுமதி யாரால் வழங்கப்படும்?

(A) Secretary, Forest Department
வனத்துறை செயலாளர்

(B) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

(C) Chief Wildlife Warden
தலைமை வன உயிரினக் காப்பாளர்

(D) State Government
மாநில அரசு

64. What is term of office of the members of the Central Zoo Authority?
மத்திய மிருகக்காட்சி சாலை அமைப்பின் உறுப்பினர்களின் பதவிக்காலம் என்ன?

(A) 1 Year
1 வருடம்

(B) 2 Years
2 வருடம்

(C) 3 Years
3 வருடம்

(D) 4 Years
4 வருடம்

65. In which section of Wildlife Protection Act, Power to compound wildlife offence is described?
வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் எப்பிரிவின் படி வனவிலங்கு குற்றங்களுக்கான இணக்கக்கட்டணம் விதித்தல் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது?

(A) Section 51
பிரிவு 51

(B) Section 52
பிரிவு 52

(C) Section 53
பிரிவு 53

(D) Section 54
பிரிவு 54

66. _______ shall inquire into, and determine the existence, nature and extent of the rights of any person in or over the land comprised within the limits of the sanctuary under section 19 of wildlife Protection Act 1972.
வனஉயிரின பாதுகாப்புச் சட்டம் 1972ன் பிரிவு 19ன் கீழ், வன உயிரின சரணாலயம் அடங்கிய நிலத்திற்குள்ளும், அதன் மேலும் ஒருவர் கோரும் உரிமைகள் குறித்து விசாரணை மேற்கொண்டு உரிய தன்மை மற்றும் அளவு குறித்து முடிவு செய்யும் அதிகாரி யார் ஆவர்?

(A) Conservator of Forests
வனப்பாதுகாவலர்

(B) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

(C) District Collector
மாவட்ட ஆட்சித்தலைவர்

(D) State Government
மாநில அரசு

67. What is the term of office of Non-official member of governing body of "National Compensatory Afforestation Fund Management and Planning Authority"?
மத்திய ஈடுசெய்யும் காடுவளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடும் அமைப்பின் ஆட்சி மன்றக்குழுவில் அலுவலர் அல்லாத உறுப்பினர்களின் பதவிக்காலம் என்ன?

(A) 4 Years
4 வருடங்கள்

(B) 3 Years
3 வருடங்கள்

(C) 2 Years
2 வருடங்கள்

(D) 1 Year
1 வருடம்

68. In which section of board standing order deals with transfer of land and buildings between State and Central Government Department
எந்த வருவாய் நிலை ஆணை எண் மூலம் நிலம் மற்றும் கட்டிடங்களை மாநில மத்திய அரசுகளுக்கு இடையே மாற்றிக்கொள்ள இடமளிக்கிறது.

(A) RSO 15
வருவாய் வாரிய நிலை ஆணை எண். 15

(B) RSO 24
வருவாய் வாரிய நிலை ஆணை எண். 24

(C) RSO 23
வருவாய் வாரிய நிலை ஆணை எண். 23

(D) RSO 26
வருவாய் வாரிய நிலை ஆணை எண். 26

69. Who shall issue Transit Permit to transport captive elephants to other States?
வளர்ப்பு யானைகள் பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்ல யாரால் இடபெயர்வு அனுமதி வழங்கப்படும்?

(A) Wildlife Warden
வனஉயிரினக் காப்பாளர்

(B) Principal Chief Conservator of Forests
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

(C) Chief Wildlife Warden, Tamil Nadu
தமிழ்நாடு தலைமை வனஉயிரினக் காப்பாளர்

(D) Secretary State Forest Department
மாநில வனத்துறை செயலாளர்

70. In which section of Indian Penal Code, the punishment for misconduct in public by a drunken person is described?
இந்திய தண்டனை சட்டம் எப்பிரிவின் படி பொது இடத்தில் குடிபோதையில் தகராறில் ஈடுபட்டால் தண்டனை வழங்க விவரிக்கப்பட்டுள்ளது?

(A) Section 507
பிரிவு 507

(B) Section 508
பிரிவு 508

(C) Section 509
பிரிவு 509

(D) Section 510
பிரிவு 510

71. In which standing Order of Board of Revenue, Escheats is described?
இறையுறு சொத்து உரிமை (Escheats) எந்த வருவாய் வாரிய நிலை ஆணையில் விளக்கப்பட்டுள்ளது?

(A) RSO 199

வருவாய் வாரிய நிலை ஆணை எண்.199

(B) RSO 198-I

வருவாய் வாரிய நிலை ஆணை எண்.198-I

(C) RSO 198

வருவாய் வாரிய நிலை ஆணை எண்.198

(D) RSO 197

வருவாய் வாரிய நிலை ஆணை எண்.197

72. In which section of Indian Evidence Act Translation of documents is discussed?
இந்திய சாட்சிய சட்டம் எப்பிரிவில் 'ஆவணங்கள் மொழி பெயர்த்தல்' விவரிக்கப்பட்டுள்ளது?

(A) Section 161
பிரிவு 161

(B) Section 162
பிரிவு 162

(C) Section 163
பிரிவு 163

(D) Section 164
பிரிவு 164

73. Power to enter and search Wood Based Industries by a Forest Officer not below the Rank of a ________ has been provided in Tamil Nadu Regulation of Wood Based Industries Rules 2010, under Rule No 9
________ தரவரிசைக்குக் குறையாத வன அலுவலரால் மர அடிப்படையிலான தொழில்களில் நுழைந்து சோதனையிடுவதற்கான அதிகாரம் தமிழ்நாடு மர அடிப்படையிலான தொழில்கள் ஒழுங்குமுறை விதிகள் 2010, விதி எண் 9 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

(A) Assistant conservator of forests
உதவி வனப்பாதுகாவலர்

(B) Forest Guard
வனக்காப்பாளர்

(C) Forest Range officer
வனச்சரக அலுவலர்

(D) Forester
வனவர்

74. Leading question can be asked even without the permission of the court during
நீதிமன்றத்தின் அனுமதி இன்றி எந்த சூழலில் வழிகாட்டு கேள்விகள் (Leading question)இடம் பெறலாம்

(A) Examination in Chief
முதன்மை விசாரணையின் போது

(B) Cross Examination
குறுக்கு விசாரணையின் போது

(C) Re-examination
மறு விசாரணையின் போது

(D) Final Arguments
இறுதி விவாதத்தின் போது

75. The Indian Evidence Act was enacted in
இந்திய ஆதார சட்டம் எப்போது சட்ட வடிவம் பெற்றது?

(A) 1972

(B) 1872

(C) 1955

(D) 1986

76. The User agency which requires Forest land for Non Forestry purpose for the first time under section 2 of Forest Conservation Act shall submit its proposal in
வனதொடர்பில்லாத பணிக்கு வனபகுதியினை முதல் முறையாக பயன்படுத்திட பயனீட்டாளர், வனப்பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 2 ன் படி எந்த படிவத்தில் தனது முன்மொழிதலை (proposal) சமர்ப்பிக்க வேண்டும்.

(A) Form A
படிவம் A

(B) Form D
படிவம் D

(C) Form B
படிவம் B

(D) Form C
படிவம் C

77. Under which section of Tamil Nadu Forest Act, 1882, the offence is respect of schedule timber is Non-bailable?
தமிழ்நாடு வனச்சட்டம் 1882ல் பிடியாணையில் பட்டியல் தடிமரம் அடிப்படையில் வெளிவர முடியாத குற்றம் எந்த பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது?

(A) Section 40 (A)
பிரிவு 40 (A)

(B) Section 45 (C)
பிரிவு 45 (C)

(C) Section 56 (A)
பிரிவு 56 (A)

(D) Section 56 (B)
பிரிவு 56 (B)

78. As per the survey and Bundaries Act, 1923 all the Village Survey Stones should be protected by?
கிராமங்களில் உள்ள நில அளவை கற்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம், 1923ன் படி கீழ்க்கண்ட அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(A) Village Officer
கிராம அலுவலர்

(B) Revenue Inspector
வருவாய் ஆய்வாளர்

(C) Deputy Tahsildar
துணை தாசில்தார்

(D) Tahsildar
தாசில்தார்

79. In which section of Tamil Nadu Survey and Demarcation of Boundaries Act 1923 powers have been vested with the Survey Officer to determine the boundary?
தமிழ்நாடு சர்வே மற்றும் எல்லை நிர்ணய சட்டம் 1923 இன் எந்தப் பிரிவில் எல்லையை நிர்ணயம் செய்ய சர்வே அதிகாரிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன?

(A) Section 7
பிரிவு 7

(B) Section 8
பிரிவு 8

(C) Section 9
பிரிவு 9

(D) Section 10
பிரிவு 10

80. How many members are appointed in Forest Court?
வன நீதிமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை எத்தனை?

(A) 6
(B) 3
(C) 9
(D) 5

81. Mention the period within which a person can claim any rights after the proclamation by Forest Settlement Officer.
வன நிர்ணய அலுவலரின் உத்தரவை எதிர்த்து கீழ்கண்ட காலவரையறைக்குள் நீதிமன்றத்தால் மேல் முறையீடு செய்யலாம்.

(A) 6 months
6 மாதம்
(B) One year
ஒரு வருடம்
(C) 3 months
3 மாதம்
(D) 1 ½ year
1 ½ வருடம்

82. One of the following is not Minor Forest Produce
கீழ்கண்டவற்றில் எது சிறுவன மகசூல் இல்லை?

(A) Honey
தேன்
(B) Gallnut
கடுக்காய்
(C) Green manure
பசுந்தழை உரம்
(D) Bamboo
மூங்கில்

83. Forest Settlement Officer appointed under Tamil Nadu Forest act in the rank of
தமிழ்நாடு வனசட்டத்தின்படி வனநிர்ணய அலுவலர்களாக நியமிக்கப்படும் அரசு அலுவலர்கள் தரநிலை

(A) Collector
மாவட்ட ஆட்சியர்
(B) Tahsildar
வட்டாட்சியர்
(C) RDO
மாவட்ட வருவாய் அலுவலர்
(D) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

84. Forest Rights Committee is constituted at the level of
வன உரிமைக்குழு ———————— நிலையில் அமைக்கப்படுகிறது.

(A) State level committee
மாநில அளவிலான குழு

(B) District level committee
மாவட்ட அளவிலான குழு

(C) Sub divisional level committee
உட்கோட்டம் அளவிலான குழு

(D) Grama sabha
கிராம சபா

85. How may Ex-Office members are appointed for the National Biodiversity authority by the Central Government?
தேசிய உயிர் பண்மை பாதுகாப்பு ஆணையத்திற்கு மத்திய அரசால் எத்தனை அலுவலர் வழி நியமிக்கப்படுகின்றன?

(A) 5 (B) 6

(C) 8 (D) 10

86. Which of the following activity is considered as Non-Forestry activity under Forest Conservation Act 1980?
வனப்பாதுகாப்புச் சட்டம் 1980ன் படி வனமில்லாத பணி கீழ்கண்ட ஒரு பணிக்கும் பொருந்தும்

(A) Establishment of forest check post
வனச்சோதனை சாவடி அமைத்தல்

(B) Constitution of waterholes in Reserved Forests
காப்புக்காட்டுப் பகுதியில் நீர் குழிகள் அமைத்தல்

(C) Formation of fire lines in Forest area
வனப்பகுதியில் தீ தடுப்பு கோடுகள் அமைத்தல்

(D) Cultivation of Tea
தேயிலை பயிரிடுதல்

87. Power to issue search warrant under section 50 (8) of wild life protection act 1972 are vested with an officer.
வனஉயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 50 (8)ன் படி தேடுதல் ஆணை வழங்கும் அதிகாரம் கீழ்கண்ட அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளது.

(A) Not below the Rank of Asssitant Conservator of Forest
உதவி வனப்பாதுகாவலருக்கு குறையாத அலுவலர்

(B) Not below the Rank of Forest Range Officer
வனச்சரக அலுவலருக்கு குறையாத அலுவலர்

(C) Not below the Rank of Forester
வனவருக்கு குறையாத அலுவலர்

(D) Not below the Rank of Forest Guard
வனக்காப்பாளக்கு குறையாத அலுவலர்

88. Unclaimed cattle may be kept in the pound for
உரிமை கோரப்படாத கால்நடைகளை பட்டியில் கீழ்கண்ட நாட்கள் வரை வைத்திருக்கலாம்.

(A) 7 days
7 நாட்கள்

(B) 10 days
10 நாட்கள்

(C) 14 days
14 நாட்கள்

(D) 15 days
15 நாட்கள்

89. Property mark to be Registered in the office of the
சொத்து உடைமைக் குறியானது கீழ்க்கண்ட அலுவலகத்தில் பதிவு செய்யப்படும்

(A) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

(B) Taluk Officer
வட்டாட்சியர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Block Development Officer
வட்டார வளர்ச்சி அலுவலர்

90. Mention the schedule and part in which crocodiles scheduled under wildlife protection act 1972?
முதலை இனம் வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972ன் படி எந்த அட்டவணையில் எந்த பிரிவின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது ?

(A) Schedule I Part I
அட்டவணை I பகுதி I

(B) Schedule I Part II
அட்வணை I பகுதி II

(C) Schedule II Part I
அட்டவணை II பகுதி I

(D) Schedule II Part II
அட்டவணை II பகுதி II

91. Who is the minimum level authorized office to evict encroachment in RF under TNF Act 1882?
தமிழ்நாடு வனச்சட்டம் 1882 பிரிவின்படி காப்புக்காடு ஆக்கிரமிப்பை அகற்ற அதிகாரம் பெற்ற குறைந்தபட்ச நிலையிலுள்ள வன அலுவலர் யார்?

(A) Assistant Conservator of Forests
உதவி வனப்பாதுகாவலர்

(B) Forest Range Officer
வனச் சரக அலுவலர்

(C) Forester
வனவர்

(D) District Forest Officer
மாவட்ட வன அலுவலர்

92. Under which section of Forest (Conservation) Act, 1980, Non - Forest Purposes Activities are prohibited in Forest lands?
1980ம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் வன நிலங்கள் பிற பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்படுவதை தடை செய்யப்பட்டுள்ளது?

(A) Section 2
பிரிவு 2

(B) Section 3
பிரிவு 3

(C) Section 3 (A)
பிரிவு 3 (A)

(D) Section 4
பிரிவு 4

93. The subject wild life and forests is in
வனமும் வன உயிரினமும் அரசின் பட்டியல்களாக எதில் வருகின்றன?

(A) Central list
மத்திய அரசு பட்டியல்

(B) State list
மாநில அரசு பட்டியல்

(C) District list
மாவட்ட பட்டியல்

(D) Concurrent list
பொதுப் பட்டியல்

94. The ratio of sandalwood selling price for a pattadar is?
பட்டாதாரர் தனது சந்தன மரத்தை அரசு மூலம் விற்று எவ்வளவை தன் பங்காகப் பெறுவார்?

(A) 60%

(B) 70%

(C) 80%

(D) 90%

95. Which is not a timber according of Tamil Nadu Forest Act 1882?
தமிழ்நாடு வனச்சட்டம் 1882ன் படி தடிமர விதிகளின்படி, எது தடிமரம் ஆகாது?

(A) Fallen Tree
விழுந்த மரம்

(B) Fashioned Tree
இழைத்த மரம்

(C) Hollowed Tree
குடைந்த மரம்

(D) Standing Tree
நிலை மரம்

96. Who recognizes Zoo under Wildlife Act 1972?
வன உயிரினச் சட்டம் 1972ன் படி ஒரு மிருகக்காட்சி சாலையை அங்கீகரிப்பது யார்?

(A) Central Government
நடுவண் அரசு

(B) Central Cabinet
மத்திய அமைச்சரவை

(C) Central Zoo Authority
மத்திய உயிரியல் பூங்கா ஆணையம்

(D) Zoological Society of India
இந்திய விலங்கியல் நிறுவனம்

97. The ________ may direct to sale any forest property seized under section 41 of Tamil Nadu Forest Act, 1882 which is subject to speedy and natural decay.
1882ம் வருட தமிழ்நாடு வனச்சட்டம் பிரிவு 41ன் படி பறிமுதல் செய்யப்பட்ட பொருள் விரைவாகவும், இயற்கையாகவும் அழுகும் தன்மைகுட்பட்டதாக இருப்பின் அதனை விற்பனை செய்ய —————— உத்தரவிடலாம்.

(A) Forest Range Officer
வனச்சரக அலுவலர்

(B) Judicial Magistrate
குற்றவியல் நீதிமன்ற நடுவர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

98. To provide the bribery by "treating" shall be punished with ______ only, its defined under section 171-E of the IndianPenal Code.
இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 171-E ன் படி, விருந்தளிப்பதன் மூலம் லஞ்சம் கொடுத்ததற்கு —————— மட்டுமே விதித்து தண்டிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

(A) Fine
அபராதம்

(B) Imprisonment
சிறை தண்டனை

(C) Imprisonment with fine
சிறை தண்டனையுடன் கூடிய அபராதம்

(D) None of (A) (B) (C)
மேற்கண்ட (A) (B) (C) எதுவுமில்லை

99. Cheating and dishonesty including delivery of property is defined under section _____ of the Indian Penal Code
ஏமாற்றுதல், பொருளைக் கொடுப்பதற்கு நேர்மையற்ற முறையில் இணங்கச் செய்தல் பற்றி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு ——————————ல் கூறப்பட்டுள்ளது.

(A) 185
(B) 420
(C) 336
(D) 416

100. Notification declaring the forests as Reserved by the Government under section _______ of Tamil Nadu Forest Act, 1882?
வனங்களை காப்புகாடுகளாக அறிவிக்கை செய்ய அரசாங்கத்திற்கு தமிழ்நாடு வனச் சட்டம் 1882ன் படி —————————— பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(A) 16
(B) 26
(C) 46
(D) 56